முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

## மட்டம் III பரீட்சை – 2022 யூலை

# (304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2022-08-21
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (**தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்**):**

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**வரையறுக்கப்பட்ட மில்லர் இன்டர்நெஷனல் கம்பனி (MIL)** இந்தியாவில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். கம்பனியின் பணிப்பாளர்கள், தமது செயற்பாடுகளை இலங்கைக்கு விஸ்தரிப்பதற்குத் திட்டமிடுகின்றனர். இந்த நோக்கத்திற்காக, **MIL** இன் 90% பங்குகளுடனும் இலங்கை முதலீட்டாளர் ஒருவரின் எஞ்சிய 10% பங்குகளுடனும் **MIL** இன் துணைக் கம்பனியொன்று இலங்கையில் கூட்டிணைக்கப்படும். இந்தத் துணைக் கம்பனி மூலப்பொருள்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் என்பதுடன் முடிவுப் பொருள்களை இந்தியாவிலுள்ள அதன் உடைமைக் கம்பனிக்கு (holding company) மீள் ஏற்றுமதி செய்யும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இலங்கையிலுள்ள துணைக் கம்பனியின் வதிவிட அந்தஸ்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) இலங்கையில் ஏற்புடையதாகவுள்ள இரண்டு (02) நேர் வரிகளை (direct taxes) **குறிப்பிடுக.**
(02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

இலங்கையில் வதிவுள்ள கம்பனியான **வரையறுக்கப்பட்ட ரமீஸ் (தனியார்) கம்பனி** வரிமதிப்பாண்டு 2021/22 இன் காலப்பகுதியில் கீழ்வரும் சொத்துக்களை விற்பனை செய்துள்ளது :

| சொத்து வகை | கொள்வனவுத் திகதி | கொள்வனவுக் கிரயம் (ரூபா) | விற்பனைத் திகதி | விற்பனை வருமானம் (ரூபா) | 2017.09.30 இல் சந்தைப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| காணி | 15.04.2015 | 3,000,000 | 01.12.2021 | 5,500,000 | 4,000,000 |
| விலை கோரப்பட்ட பங்குகள் | 01.09.2020 | 540,000 | 15.12.2021 | 650,000 | 590,000 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலிலிருந்தான மூலதன நயத்தைக் (capital gain) **கணிக்குக.**
(03 புள்ளிகள்)

(b) மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் மீது செலுத்த வேண்டிய மொத்த மூலதன நய வரியைக் **கணிக்குக.**
(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட ரன் கஹட்ட கம்பனி** தேயிலையை ஏற்றுமதி செய்யும் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற ஒரு கம்பனியாகும். வரிமதிப்பாண்டு 2019/20 காலப்பகுதியில் வெள்ளப்பெருக்கு காரணமாக ரூபா 10 மில்லியன் பெறுமதியான தேயிலை இருப்பு சேதமடைந்ததுடன் காப்புறுதி கோரிக்கையின் ஊடாக ரூபா 8 மில்லியன் மீளளிக்கப்பட்டது. மீதித் தொகையான ரூபா 2 மில்லியன் கம்பனியினால் செலவின மொன்றாகத் தாக்கல் செய்யப்பட்டதுடன் வருமான வரி நோக்கங்களுக்காக கோரிக்கையிடப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

காப்புறுதி ஊடாக மீளளிக்கப்படாத இருப்பு நட்டமானது வருமான வரிக்கான கழிப்பனவுக்கு அனுமதிக்கத்தக்கதா என்பதை "Hayley & Co. Ltd. Vs. CIR" என்ற வழக்கை தொடர்புபடுத்தி **விபரிக்குக.**
(05 புள்ளிகள்)

## வினா 04

**மகேஷி** என்பவர் 2018 ஆம் ஆண்டில் தனது தந்தையிடமிருந்து காணியொன்றை அன்பளிப்பாகப் பெற்றுக் கொண்டார். உரிமை மாற்றம் செய்யப்பட்ட திகதியில் காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 5,000,000/- ஆகும்.

2021 மே 30 இல், **மகேஷி** இந்தக் காணியை **கசுன்** என்பவருக்கு ரூபா 7,500,000/- இற்கு விற்பனை செய்திருந்தார். இந்தப் பெறுமதியானது விற்பனைத் திகதியில் அதன் சந்தைப் பெறுமதிக்குச் சமனாக இருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முத்திரைத் தீர்வையைச் (stamp duty) செலுத்துவதற்குப் பொறுப்புடைய நபரைக் **குறிப்பிடுக.**
(02 புள்ளிகள்)

(b) மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் மீதும் செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையை **மதிப்பிடுக.**
(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**கேசுகே பேக்கர்ஸ்** என்பது வெதுப்பகத் (பேக்கரி) தொழிலில் ஈடுபடுகின்ற பெறுமதிசேர் வரிக்குப் (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனியாகும். 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் வணிகத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டு காலப்பகுதியில் ஈட்டப்பட்ட வருமானத்தின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன (VAT தவிர்ந்த):

| | ரூபா |
|---|---|
| பாண்களின் விற்பனை | 37,037,000 |
| மிட்டாய்களின் விற்பனை | 44,340,000 |
| வெதுப்பகப் பொருள்களின் விநியோகத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வேன் (van) ஒன்றின் விற்பனை | 650,000 |

(2) கம்பனியானது காலாண்டு காலப்பகுதியில் கீழ்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியுள்ளது :

| | ரூபா |
|---|---|
| மிட்டாய்கள் தொடர்பான கொள்வனவின் மீது | 1,653,000 |
| பாண்கள் தொடர்பான கொள்வனவின் மீது | 96,000 |
| பொதுவான செலவினங்கள் மீது (பாண்கள் மற்றும் மிட்டாய்கள் தொடர்பானவை) | 234,000 |
| பணிப்பாளரின் மோட்டார் காரொன்றுக்கு செய்யப்பட்ட பழுதுபார்ப்பின் மீது | 16,000 |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT தொகை ரூபா 64,000/-.

(4) கம்பனி மாதாந்த VAT தவணைக் கட்டணங்களாக ரூபா 1,000,000/- செலுத்தியிருக்கிறது.

*(நியம VAT வீதம் 8% எனக் கொள்க.)*

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதி சேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

### வினா 06

**ஜே.ஜே. ஸ்டார்ஸ் PLC** என்பது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு டயர்களை தயாரிப்பதில் ஈடுபடுகின்ற இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இந்தக் கம்பனி வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வருமான வரித் திரட்டினை இன்னும் வழங்கியிருக்கவில்லை.

கிடைக்கப்பெற்ற தகவல்களைப் பயன்படுத்தி, உதவி ஆணையாளர் 2022 மார்ச் 31 இல் தவறிய மதிப்பீடொன்றை (default assessment) வழங்கியுள்ளார். கம்பனியின் பணிப்பாளர்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை நியமிக்க விரும்புகின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தவறிய மதிப்பீடொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய மூன்று (03) விடயங்களை (items) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவராக கம்பனியால் நியமிக்கப்படக்கூடிய நான்கு (04) நபர்களை **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) நிருவாக மீளாய்வு ஒன்றிற்கான மேன்முறையீடொன்றைச் செய்யும்போது, **ஜே.ஜே. ஸ்டார்ஸ் PLC** இணங்க வேண்டிய மூன்று (03) நிபந்தனைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**சிலோன்ஸ்டார்** என்பது நாடு பூராகவும் மசாலாப் பொருள்களைத் தயாரித்து விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ள ஒரு பங்குடமை வியாபாரமாகும். **இரேஷ்** மற்றும் **அஜித்** ஆகியோர் இணைந்து முன்னெடுத்துச் செல்லும் இந்தப் பங்குடமையின் இலாப, நட்டங்களை அவர்கள் முறையே 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர்.

(1) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொழிப்பாக்கப்பட்ட வருமானக் கூற்று கீழ்வருமாறு:

| | **ரூபா** |
|---|---:|
| மொத்த இலாபம் | 22,750,000 |
| வட்டி வருமானம் | 452,000 |
| | **23,202,000** |
| விநியோகச் செலவினங்கள் | (8,625,000) |
| நிருவாகச் செலவினங்கள் | (9,785,400) |
| **பங்குடமையின் நிகர இலாபம்** | **4,791,600** |

(2) மேற்படி இலாபத்தைக் கணிக்கும்போது, கீழ்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டிருந்தன :

(i) **இரேஷ்** மாதாந்தச் சம்பளமாக ரூபா 180,000/- பெறுவதுடன் **அஜித்,** வாடிக்கையாளர் தளத்தைப் பேணுவதற்கான விசேட கொடுப்பனவாக ஒவ்வொரு ஆண்டினதும் மொத்த இலாபத்திலிருந்து 10% இனைப் பெற்றுக் கொள்கிறார்.

(ii) விநியோக வாகனங்கள் மீது அறவிடப்படும் தேய்மான விபரங்கள் கீழ்வருமாறு :

| **விநியோக வாகனங்கள்** | **கிரயம் (ரூபா)** | **கொள்வனவுத் திகதி** | **ஆண்டிற்கான தேய்மானம் (ரூபா)** |
|---|---:|---|---:|
| மோட்டார் லொறி | 12,000,000 | 01.04.2018 | 1,500,000 |
| மோட்டார் சைக்கிள் | 480,000 | 01.04.2018 | 120,000 |
| முச்சக்கர வண்டி | 580,000 | 01.04.2019 | 145,000 |

(3) **அஜித்** இனுடைய வதிவிடத்தின் முதலாவது மாடியை பங்குடமையின் அலுவலகமாகப் பயன்படுத்துவதற்காக அவருக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 360,000/- வாடகை செலுத்தப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வரிமதிப்பாண்டு 2021/22 இற்காக பங்குடமை செலுத்த வேண்டிய வருமான வரியை **மதிப்பிடுக.**

(10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட கிட்ஸ் ரொயிஸ் (தனியார்) கம்பனியானது** பொம்மைகளை இறக்குமதி செய்து அவற்றை மொத்த விற்பனைச் சந்தையில் விற்பனை செய்கின்ற வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும்.

கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட கிட்ஸ் ரொயிஸ் (தனியார்) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

(1) சகல செலவினங்களும் தாக்கல் செய்யப்பட்டு சகல வருமானங்களும் வரவு (crediting) வைக்கப்பட்டதன் பின்னரான, 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முந்திய நிகர இலாபம் ரூபா 13,150,000/- ஆக இருந்தது. கம்பனியின் மொத்தப் புரள்வு ரூபா 570,000,000/- ஆகும்.

(2) பிற வருமானங்களின் கூறுகள் :

| | ரூபா |
|---|---|
| **வரையறுக்கப்பட்ட A** கம்பனியிடமிருந்தான பங்கிலாப வருமானம் (இலாபத்திலிருந்து வழங்கப்பட்டது) | 840,000 |
| நிலையான வைப்புகளிலிருந்தான வட்டி வருமானம் | 1,930,000 |
| வாடகை வருமானம் | 360,000 |
| மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபம் | 470,000 |

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழ்வருமாறு :

| சொத்துக்கள் (கிரயம்) | 2021.04.01 இல் மீதி (ரூபா) | சேர்த்தல்கள் (ரூபா) | அகற்றல்கள் (ரூபா) | 2022.03.31 இல் மீதி (ரூபா) |
|---|---|---|---|---|
| காணி | 1,970,000 | 600,000 | - | 2,570,000 |
| அலுவலகக் கட்டடம் | 3,230,000 | - | - | 3,230,000 |
| மோட்டார் வாகனங்கள் | 3,200,000 | - | 1,100,000 | 2,100,000 |
| தளபாடமும் பொருத்துகளும் | 1,100,000 | 80,000 | - | 1,180,000 |
| **மொத்தம்** | **9,500,000** | **680,000** | **1,100,000** | **9,080,000** |

- 2016 மே இல் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மோட்டார் லொறியானது ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 1,600,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. மீதமுள்ள மோட்டார் வாகனங்கள் விநியோக வேன்களைக் குறிக்கின்றன.
- விசேடமாகக் குறிப்பிட்டவை தவிர, 2021 ஏப்ரல் 01 இலான சகல சொத்துக்களும் 2018 ஏப்ரலில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவுத் திகதியிலிருந்து மூலதன விடுதொகைகள் (capital allowances) கோரப்பட்டுள்ளன.

(4) நிருவாகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்குகின்றன :

- ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் ரூபா 3,536,000/-.
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 1,910,000/-.
- கம்பனியானது சுகாதார அமைச்சுக்கு ரூபா 1,000,000/- பெறுமதியான மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

(5) விநியோகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன :

- வரி மதிப்பாண்டின் காலப்பகுதியில், சந்தைப்படுத்தல் முகாமையாளர், வழங்குநர்களைச் சந்திப்பதற்காக துபாய் நாட்டிற்குச் சென்றிருந்ததுடன் அவரது பயணத்திற்காகச் செலவிடப்பட்ட கிரயம் ரூபா 536,000/-.
- கம்பனியின் எதிர்காலக் கொள்வனவாளர்களைக் களிப்பூட்டுவதற்காக ரூபா 135,000/- செலவிடப்பட்டது.
- உள்நாட்டு ஊடகங்களில் விளம்பரங்கள் செய்ததற்காக ரூபா 435,000/- செலவிடப்பட்டது.

(6) ஆண்டின் காலப்பகுதியில் பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடையாக ரூபா 625,000/- செலுத்தப்பட்டிருந்தது.

(7) வரிமதிப்பாண்டு 2021/22 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கட்டணங்களாக ரூபா 4,200,000/- இனை கம்பனி செலுத்தியிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2021/22 இற்காக **வரையறுக்கப்பட்ட கிட்ஸ் ரொயிஸ் (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி வருமான வரி.

*(குறிப்பு: ஏதாவது செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

## வினா 09

**ரவி** ஒரு பொறியியலாளர் ஆவார். அவர் இலங்கையிலுள்ள முன்னணி ஆடைக் கம்பனியொன்றில் பணி புரிகிறார்.

வரிமதிப்பாண்டு 2021/22 (இதன் பின்னர் 'ஆண்டு' எனக் குறிப்பிடப்படும்) இற்கான **ரவி** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன :

(1) ஊழியத்திலிருந்தான (Employment) வருமானம் :

- மொத்தச் சம்பளம் – மாதாந்தம் ரூபா 390,000/-.
- பயணப் படி (Travelling allowance) – மாதாந்தம் ரூபா 60,000/-.
- ஆண்டின் காலப்பகுதியில், அவரது மகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதன் பொருட்டான மொத்த வைத்தியசாலைக் கட்டணம் ரூபா 314,000/- கம்பனியால் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், கம்பனியானது மருத்துவ மீளளிப்புகள் தொடர்பில் சகல ஊழியர்களுக்கும் ஒரே விதமான வரையறைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதில்லை.

- ஒரு மாத மிகையூதியம் 2021 டிசெம்பரில் செலுத்தப்பட்டது.
- அவர் மாதாந்த வாடகை ரூபா 50,000/- இற்குப் பெறப்பட்ட ஒரு வாடகை வீட்டில் வசிப்பதுடன் கம்பனி அவரது வாடகையை மீளளிப்புச் செய்கிறது.
- கம்பனி அவரது கையடக்கத் தொலைபேசிக்கான கட்டணத்தைச் செலுத்தும் பொறுப்பை ஏற்றிருந்ததுடன் இதன் பொருட்டு, ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 40,000/- மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.
- முற்பண தனியாள் வருமான வரியாக (APIT) ஆண்டிற்காகக் கழிக்கப்பட்ட வரி ரூபா 266,880/-.

(2) அவருக்குச் சொந்தமான பரம்பரை வீடு ஒன்று கேகாலையில் இருப்பதுடன் அதனை அருகிலுள்ள வீட்டாருக்கு ரூபா 25,000/- மாதாந்த வாடகைக்குக் கொடுத்துள்ளார். இந்த வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூபா 150,000/- என்பதுடன் சோலைவரியானது 30% இல் வாடகைக்குப் பெற்றவரால் செலுத்தப்படுகிறது.

(3) ஆண்டின் காலப்பகுதியில் RFC கணக்கொன்றின் மூலம் 300 அமெரிக்க டொலர் (1 அமெரிக்க டொலர் = ரூபா 210/-) வட்டி வருமானத்தை அவர் பெற்றிருந்தார்.

(4) ஆண்டின் காலப்பகுதியில், **ரவி** அரச வங்கியொன்றிலிருந்து வீட்டுக் கடனொன்றைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் இதற்கான மாதாந்தத் தவணைக் கட்டணம் ரூபா 80,000/- ஆகும். ஆண்டின் காலப்பகுதியில் கடன் மீது செலுத்தப்பட்ட வட்டி மற்றும் மூலதன மீள்கொடுப்பனவுகள் முறையே ரூபா 490,000/- உம் ரூபா 470,000/- உம் ஆகும்.

(5) விலைகோரப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பங்கிலாபம் (பெற்ற பங்கிலாபத் திலிருந்து செலுத்தப்பட்டது) ரூபா 225,000/-.

(6) சிறுநீரக நோயாளர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக பொலநறுவை பிரதேச சபைக்கு ரூபா 800,000/- பெறுமதியான நீரை வடிகட்டும் இயந்திரங்கள் (water filters) நன்கொடையாக அளிக்கப்பட்டன.

(7) **ரவியின்** மகன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்பைத் தொடர்வதுடன் ஆண்டின் காலப்பகுதியல் பாடநெறிக் கட்டணமாக **ரவி** 270 அமெரிக்க டொலரை அனுப்பியிருந்தார்.
*(1 அமெரிக்க டொலர் = ரூபா 210/-)*

(8) வரிமதிப்பாண்டு 2021/22 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கட்டணங்களாக ரூபா 60,000/- இனை அவர் செலுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2021/22 இற்கு **ரவிக்காக** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி.

(c) செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின்.

*(**குறிப்பு:** ஏதாவது வருமானம் விரிவிதிக்கத்தக்கது அல்ல எனின், அதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்..)* (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |